www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Examination - 2021

FWC

| | | | |
|---|---|---|---|
| பரதநாட்டியம் I<br>Dance I | Two Hours<br>Gr -13 (2021) | 53 | T | I |

### பகுதி I

❖ **1 – 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையினை தெரிந்தெடுத்து புள்ளடி இடுக.**

01. ஆலய வழிபாட்டில் ஷோடசோபசாரத்தில் நிருத்த உபசாரம் என்பது
 1) வாத்தியம் 2) பண்ணிசை 3) நாட்டியம் 4) சங்கீதம் 5) தீபாராதனை

02. தாமரையின் இதழ்களை சேர்த்து வைத்து ஊசி நுழையும் நேரத்தினைக் குறிப்பது.
 1) மார்க்கம் 2) கிரியை 3) காலம் 4) நிமிஷம் 5) அங்கம்

03. எழுபத்திரெண்டு மேளகர்த்தா சக்கரம் இரு பெரும் பிரிவுகளாவதற்கு காரணம்
 1) ஸட்ஜம் 2) மத்திமம் 3) பஞ்சமம் 4) தைவதம் 5) காந்தாரம்

04. அதிபங்க வடிவம் கொண்ட நடனவகை
 1) ஒடிசி 2) கதக் 3) பரதம்
 4) மணிப்புரி 5) மோகினியாட்டம்

05. சிருங்கார ரஸத்தில் இருந்து உற்பத்தியான ரஸம்
 1) கருணா 2) ஹாஸ்யம் 3) ரௌத்திரம் 4) பயானகம் 5) சாந்தம்

06. கதக் நடன இசைமரபு
 1) கர்நாடக இசை 2) ஷோபான இசை 3) ஹிந்துஸ்தானிய இசை
 4) மேல் நாட்டு இசை 5) வாய்ப்பாட்டிசை

07. பலராமன் எவ்வகை நாயகன் ஆவான்
 1) தீரசாந்தன் 2) தீரலலிதன் 3) பீடமர்த்தன் 4) விதூஷகன் 5) தீர உதாத்தன்

08. குதிரை பாய்வது போல் கால்களை மடித்துப் பாயும் செயன்முறை
 1) அஷ்வோத்பிளவனம் 2) அலகம் 3) கர்த்தரி
 4) உத்பிளவனம் 5) வேகினி

09. முருகன் சூரனை வென்று ஆடிய கூத்து
 1) துடிக்கூத்து 2) பேடிக்கூத்து 3) பாவைக்கூத்து 4) குடக்கூத்து 5) குடைக்கூத்து

10. "தௌரீயத் திரிகம்" எனச் சொல்லப்படுவது
 1) கீதம், வாத்தியம், நிருத்தியம் 2) நிருத்தம், நிருத்தியம், நாட்டியம்
 3) அங்கம், பிரத்தியாங்கம், உபாங்கம் 4) பாவம், ராகம், தாளம்
 5) ஆங்கிகம், வாச்சிகம், ஆஹார்யம்

11. "நக்கன் தீறணி பவளக்குன்றம்" என்பதில் நக்கன் என்றால்
 1) நடம் புரியும் சிவன் 2) நடிகன் 3) நடம் புரியும் விநாயகர்
 4) பேராயன் 5) நடம் புரியும் கிருஷ்ணர்

12. ஸ்வரங்களுக்கு நிருத்தமும், ஸ்வர அமைப்புக்கான பாடலுக்கு அபிநயமும் இடம்பெறும் உருப்படி
 1) ஜாவளி 2) அலாரிப்பு 3) சப்தம் 4) அஷ்டபதி 5) பதவர்ணம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

13. தகதிமி தகதிமி தகதிமி தக ததிங் /, கிணதொம் ததிங், கி/ண தொம் ததிங், கிண தொம் // இது அமைந்த ஜாதி
    1) மிஸ்ரம் 2) சதுஸ்ரம் 3) கண்டம் 4) திஸ்ரம் 5) சங்கீர்ணம்

14. கதிர்காமக் கந்தனின்மயில் வாகனத்தை குறித்து புகழ்ந்து ஆடும் வண்ணம்
    1) சவுளா வண்ணம் 2) ஈரடி வண்ணம் 3) மயூர வண்ணம்
    4) உரக வண்ணம் 5) உக்குஸா வண்ணம்

15. யக்ஷகானம் சிறப்புப்பெற்று விளங்கிய காலம்
    1) நாயக்கர் காலம் 2) சோழர்காலம் 3) சங்ககாலம்
    4) சங்கமருவியகாலம் 5) மராட்டியர் காலம்

16. சிவனுடைய முக்கண் குறிப்பது
    1) சூரியன், சந்திரன், அக்கினி 2) சூரியன், சந்திரன், நச்சத்திரம்
    3) சூரியன், சந்திரன், ஓம்காரம் 4) ஆண், பெண், அக்கினி
    5) ஓம்காரம்

17. சொல்லிலும் செயலிலும் சாதுரியம் உடைய நாயகி
    1) முதிதை 2) குப்தை 3) குலடை 4) விதத்தை 5) இலிங்கினி

18. பிரமரியை பிரதான அசைவாகக் கொண்ட நடனம்
    1) கதகளி 2) கதக் 3) ஒடிசி 4) பரதம் 5) குச்சிப்புடி

19. கொஹொம்பகங்காரியாவினை தழுவி வந்த சம்பிரதாய நடனம்
    1) உடறட்ட 2) பஹத்தறட்ட 3) சப்ரகமுவ 4) நையாண்டி 5) உடக்கி

20. கணவனுக்கும், மனைவிக்கும் இடையிலான பாவம்
    1) வாத்சல்யபாவம் 2) சாக்கியபாவம் 3) மதுரபாவம்
    4) காந்தபாவம் 5) தாஸிய பாவம்

21. இயற்கையில் இருந்து பெறப்பட்ட கிராமிய இசைக்கருவிகளுள் ஒன்று
    1) உடுக்கு 2) தப்பு 3) மத்தளம் 4) சேமக்கலம் 5) சங்கு

22. கலை உலகிற்கு, சித்தோத்திரயோகி அளித்த பெரும் கொடை
    1) பாமாகலாபம் 2) கொல்லா கலாபம் 3) பாலகோபால தரங்கம்
    4) பாரிலஜாதபகரணம் 5) கிருஷ்ணலீலா தரங்கிணி

23. சிவலோகத்தை குறித்து ஆடப்படும் நடனமாக விளங்கும் வண்ணம்
    1) நையடிவண்ணம் 2) சவுளாவண்ணம் 3) வைரோடிவண்ணம்
    4) துரகவண்ணம் 5) ஈரடிவண்ணம்

24. கண்டிய நடனத்தில் இடம்பெறும் நிருத்திய உருப்படி எது?
    1) யக்ஹனும 2) ஹத்பதய 3) யக்கம 4) ஆவந்தும 5) குருகேமாலாவ

25. வீணையை செங்குத்தாக நிறுத்தி வாசிப்பதில் திறமை பெற்றவர்
    1) குப்பையர் 2) பக்சி சுப்பண்ணா 3) கிருஷ்ணையர்
    4) ரமணி சங்கர சாஸ்திரி 5) சிட்டிபாபு

26. தேர் ஓடுவதையும் நிற்பதையும் கட்டுப்படுத்தும் இசைக்கருவி
    1) தாளம் 2) சங்கு 3) பறை 4) தப்பு 5) மத்தளம்

27. பாத்திரம் ஆனவள் கண்களைக் கொண்டு அபிநயிக்கும் சாத்விகா அபிநயம்
    1) சாட்சுஷிய சாத்விகம் 2) வியஞ்சகம் 3) அஷ்ரு
    4) வைவர்ணய 5) ரோமாஞ்ச

28. சங்கீதமேளம் தோற்றுவிக்கப்பட்ட காலம்
    1) சங்ககாலம் 2) சோழர்காலம் 3) பல்லவர்காலம்
    4) நாயக்கர்காலம் 5) ஆங்கிலேயர் காலம்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

29. தஞ்சைப் பிருகதீஸ்வரர் ஆலயத்தில் ராஜமோகினி பாத்திரத்தை ஏற்று ஒரு ஆண்டு தொடர்ந்து அபிநயித்தவர்
    1) பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை.
    2) பந்தணை நல்லூர் சபாரஞ்சிதம்.
    3) தஞ்சாவூர் சுப்பராயநட்டுவனார்.
    4) அபிநய அரசி பாலசரஸ்வதி.
    5) கலைமாமணி ருக்மணிதேவி அருண்டேல்.

30. மத்தளத்தை தோளில்மாட்டி சுழன்று ஆடும் நடனம்
    1) கர்த்தாசோலம் 2) மஞ்சிராசோலோம் 3) கர்த்தா சோலம்
    4) டொல்சந்ரா 5) புங்சோலம்

31. வலது காலை ஊன்றி அரைமண்டியில் இருந்து இடதுகாலைத் தூக்கிச்சுற்றி வரும் ப்ரமரி பேத
    1) கருடப்பிரமரி 2) சக்ரப்ரமரி 3) அங்கப்ரமரி
    4) குஞ்சிதப்ரமரி 5) ஆகாசப்ரமரி

32. நடமாடும் சிற்பம் என வர்ணிக்கப்படும் சாஸ்திரிய நடனம்
    1) ஒடிசி 2) மோகினி ஆட்டம் 3) கதகளி
    4) மணிப்புரி 5) பரதம்

33. ஆனந்தத் தாண்டவங்களில் திரிபுரதாண்டவம் குறிப்பது.
    1) அழித்தல் 2) மறைத்தல் 3) அருளல் 4) காத்தல் 5) படைத்தல்

34. ஒரு காட்சியமைப்பை ஒரு நிரை ஒளிகளின் மூலம் ஒளியூட்டப்பயன்படும் ஒளி
    1) பரப்பு ஒளி 2) குவிந்த ஒளி 3) கரை ஒளி
    4) காண் ஒளி 5) பிரகாசமான ஒளி

35. ஒருவரோடொருவர் இசை பொருந்த உரையாடி ஆடும் கிராமிய நடனம்
    1) குதிரையாட்டம் 2) பொம்மலாட்டம் 3) ஒயிலாட்டம் 4) கரகம் 5) ஏந்தல் நடனம்

36. முகாரி, ஸஹானா, ஆஹிரி ஆகிய இராகங்களின் ரஸம்
    1) சாந்தம் 2) கருணா 3) பீபத்ஸம் 4) ஹாஸ்யம் 5) பயானகம்

37. ராணிகும்பா குகைகளில் காணப்படும் சிற்பங்கள் உணர்த்தும் சாஸ்திரிய நடனம் எது?
    1) ஒடிசி 2) மோகினி ஆட்டம் 3) குச்சிப்புடி ஆட்டம்
    4) கதக் 5) கதகளி

38. "மாயன் குழலிசையில் மயங்கி விட்டேனடி" எனும் பாடல் அமையும் உருப்படி வகை
    1) யாவளி 2) கீர்த்தனை 3) பதம் 4) அஷ்டபதி 5) வர்ணம்

39. கண்டிய நடனத்தில் இடம்பெறும் சுத்தநிருத்தப் பகுதிகளுள் ஒன்று
    1) யக்ஹனும 2) யக்கம 3) ஆவந்தும 4) குருகேமாலவ 5) துணுமாலக்புவ

40. இரு காதலர்களுக்கிடையிலான பாவம்
    1) காந்தபாவம் 2) மதுரபாவம் 3) தாஸியபாவம் 4) சாக்கியபாவம் 5) வாத்சல்யபாவம்

❖ **41 – 45 வரையான வினாக்களுக்கு அட்டவணையைப் பயன்படுத்தி மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| தோற்றம் பெற்ற இடம் | நடனம் | நடன உருப்படிகள் | இசை | கலைஞர் |
|---|---|---|---|---|
| ஆந்திரா | A | தரங்கம் | கர்நாடகம் | பேரய்யா சாஸ்திரி |
| மணிப்பூர் | மணிப்புரி | B | ஹிந்துஸ்தானி | தோம்பாஹயோபம் |
| வடஇந்தியா | கதக் | தரண | C | கல்கபிரசாத் |
| ஒரிசா | ஒடிசி | பதுநிருத்தியம் | ஹிந்துஸ்தானி | D |
| E | கதகளி | புறப்பாடு | சோபான | கோபிநாத் |

41. A இல் இடம்பெற வேண்டிய சாஸ்திரிய நடனம்
    1) குச்சிப்புடி 2) மணிப்புரி 3) கதக் 4) ஒடிசி 5) கதகளி



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

42. B இல் இடம்பெற வேண்டிய நடன உருப்படி
   1) தரங்கம் 2) தரண 3) சங்கீர்த்தனம் 4) பதுநிருத்தியம் 5) புறப்பாடு

43. C இல் இடம்பெற வேண்டிய இசை
   1) கர்நாடகம் 2) மெல்லிசை 3) தமிழிசை 4) ஹிந்துஸ்தானி 5) சோபான

44. D க்கு உரிய கலைஞர்
   1) பேரய்யா ஸாஸ்திரி 2) தோம்பா ஹயோபம் 3) கல்கபிரசாத்
   2) 4) கோபிநாத் 5) கும்கும் தாஸ்

45. E இல் இடம்பெற வேண்டிய தோற்றம் பெற்ற இடம்
   1) கேரளம் 2) ஆந்திரா மாநிலம் 3) மணிப்பூர் 4) வட இந்தியா 5) ஒரிசா

46. இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவி



   1) தாளம்
   2) சேமக்கலம்
   3) உடுக்கு
   4) சல்லாரி
   5) தப்பு

47. இப்படத்தில் காட்டப்பட்ட கலைஞர்



   1) பிரம்மஸ்ரீ வீரமணிஐயர்
   2) கீதாஞ்சலி வி.கே.நல்லையா
   3) க.தொம்மக்குட்டி
   4) ந.இராசரத்தினம்
   5) கலைச்செல்வன் ஓரம்பு சுப்பையா

48. இப்படத்தில் காட்டப்பட்ட சாஸ்திரிய நடனம்



   1) கதகளி
   2) ஒடிசி
   3) மோகினி ஆட்டம்
   4) மணிப்புரி
   5) கதக்

49. இப்படத்தில் காட்டப்பட்ட பரதநாட்டிய அணிகலன்



   1) ஒட்டியாணம்
   2) வங்கி
   3) காதுமாட்டி
   4) அட்டியல்
   5) பதக்கம்

50. இப்படத்தில் காட்டப்பட்ட கிராமிய நடனம்



   1) ஒயிலாட்டம்
   2) பொம்மலாட்டம்
   3) ஏந்தல் நடனம்
   4) குதிரையாட்டம்
   5) மயிலாட்டம்

(50X2=100 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021

## Conducted by Field Work Centre, Thondaimanaru.

## 6th Term Examination - 2021

குறுஉள

| | | | |
|---|---|---|---|
| பரதநாட்டியம் II<br>Dance II | Three Hours<br>Gr -13 (2021) | 53 T II | |

### பகுதி II

❖ **பகுதி I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி I

01. i) நாட்டிய நிகழ்ச்சியில் இறுதியாக இடம்பெறும் உருப்படி யாது? (1 புள்ளி)

ii) அவ் உருப்படியின் இராகம் தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

அவ் உருப்படியின் பாடல் ஆக்கம், நடன ஆக்கம் செய்தவர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iv) உருப்படியின் லக்ஷணத்தை எழுதுக. (5 புள்ளிகள்)

v) அவ் உருப்படியின் பாடலினையும் இரண்டாவது கோர்வையினையும் தாள அங்கக் குறியீட்டில் எழுதுக. (10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

agaram.lk

02. i) திரிபங்க நிலையில் ஆடப்படும் சாஸ்திரிய நடனத்தை பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

i) தோற்றம் வளர்ச்சி (5 புள்ளிகள்)

ii) ஆட்டமுறை (5 புள்ளிகள்)

iii) இசை, பக்கவாத்தியம் (5 புள்ளிகள்)

iv) ஒப்பனை, கலைஞர்கள் (5 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. i) சப்த தாளங்கள் 175 தாளங்களாகும் முறையினை விளக்குக. (10 புள்ளிகள்)

ii) தாள தஷப்பிராணன்களில் மகாபிராணன், உபபிராணன்களை வகைப்படுத்தி, அவற்றுள் யதிகளைக் குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

## பகுதி II

04. நடராஜ திருவுருவத்தில் பின்வரும் தத்துவக் கருத்துக்களை விளக்குக.

i) அவரது அங்கங்கள் குறித்து நிற்கும் தத்துவக்கருத்துக்களில் குறைந்தது பத்தினை தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

ii) அவரது அணிகலன்கள் குறித்து நிற்கும் தத்துவக் கருத்துக்களில் குறைந்தது பத்தினை தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. சோழர் காலத்தில் கலை வளர்ச்சி பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

06. சிறுகுறிப்பு எழுதுக.

1) கலாஷேத்திரம் 2) குற்றாலக்குறவஞ்சி 3) மலையகக்கூத்து 4) சொக்கரி

(4 x 5 =20 புள்ளிகள்)

07. "கலைச்செல்வன்" என்ற கௌரவத்தை பெற்றுக் கொண்ட கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் நாட்டிய வளர்ச்சிக்கு ஆற்றிய பணி பற்றியும் தருக.

(20 புள்ளிகள்)

08. குருகுல நடனக்கல்வி முறைக்கும், தற்கால நடனக் கல்வி முறைக்கும் இடையிலான வேறுபாடுகளை விபரிக்குக.

(20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk